MASTER NEGATIVE
NUMBER

6131.44

குமரன்
ஆரம் 1, முத்து 44
June 25, 1924

Record no. 313

Kumaraṉ

Āram 1, muttu 44

June 25, 1924

Record no. 313

Registered No. M. 1823.

உ
சிவமயம்.

"KUMARAN" Karaikudi.

குமரன்



" என்கடன் பணிசெய்து கிடப்பதே."

(வாரப் பதிப்பு.)

புதன்கிழமை தோறும் பிரசுரமாகும்.

" ஆலயந் தொழுவது சாலவு நன்று." " திரைகட லோடியுந் திரவியந்தேடு."

ஆரம் க. } காரைக்குடி, ரக்தாக்ஷிஸு ஆனிமீ கஉ (25-6-24) { முத்து [illegible]

பெண் மக்கள் நிலை.

சில வன்பர்கள் பெண்மக்களைப் போட்டு அடித்து நொறுக்கி விடுகின்றனர். அன்பும் அன்புங் கலந்து வாழ வேண்டுமென்று கூறும் தமிழ் நூல்கள் வீண் பிதற்றலாகி விட்டன. கணவனும் மனைவியும் ஒருயிர் உடலம் இரண்டென நூல்கள் கூறுகின்றன. ஆனல் நடை முறையில் கணவனென்று, மனைவி யொன்று, இருவருக்கு மிடையில் கம்பு மூன்றுவதாகத் தோன்றி யிருக்கிறது போலும்! நல்ல பெண் குழந்தைகள் முரடர்கள் கையில் சிக்குண்டு படும்பாடு கொஞ்சமோ? கணவனிடத்துக் காதல்கொண்டு வாழும் வாழ்க்கையில் காதறுந்தும் கண் கெட்டும் காது கெட்டும் பல்லுடைந்தும் கால் கைகள் முடமாகியும் போயின பெண்களெத்தனை? இவை யாவற்றுக்கும் சுதந்தர வுணர்ச்சி யற்று அடிமைப் புத்தியுடையோராயிருப்பதே முக்கிய காரணமாகும். தனக்குத் தானே அடிமை யெண்ணமின்றி இறைவன் திருவடியில் இருவருடைய மனதையும் பொருத்திக் கடமை யுணர்ந்து வாழ்வார்களானல் துன்பமேது? இல்வாழ்க்கையே இன்ப வாழ்க்கை யாகுமன்றே?

* * *

அவ்வாறன்றி ஒவ்வொரு நாளும் மன திருப்தி யின்றி வேறு வழி யின்மையால் ஆற்றுமை வயப்பட்டு வாழ்க்கை நடத்துவதாற்றன் அழகிப் போன குணமுள்ள குழந்தைகள் தோன்றுகின்றன. கணவனும் மனைவியும் அன்பின் பெருக்கில் இரண்டற்று வாழும் வாழ்வன்றே வாழ்வாகும்? அவ்வாழ்க்கை காரணமாகப் பிறப்பதன்றே குழந்தை? அவ்வாறன்றி அடியும் வசவுமாக ஆராதனை செய்து கொண்டு செயலற்று ஒருவரை யொருவர் நோக்கிப் பெறுங் குழந்தை உலகிற் பெரு ங்காரியங்களைச் செய்தல் முடியுமோ?

* * *

உண்மைத் தத்துவத்தை யுணர வேண்டும். முற் காலத்தில் பிறந்தருளிய பெரியோர்களின் சரித்திரத்தைப் படியுங்கள்! சுத்த வீரர்களாகப் பிறந்து நாட்டை யாண்டு நன்னிலைப் படுத்திய அரசர்களது சரித்திரத்தைப் பாருங்கள்! அவற்றிலிருந்து அறியக் கிடப்பதென்ன? ஒழுக்கமும் அறிவும் கடமை யுணர்ந்து நடத்திய வாழ்க்கையும் தெய்வ பக்தியுமே அவர்கள் நல்ல குழந்தைகளைப் பெற்றதற்குக் காரணங்களாகு மென்பது தோற்றவில்லையா?

* * *

உண்மையாக உற்று நோக்கினல் உலகத்தை நன்னிலைப்படுத்துவதும் தீ நிலைப்படுத்துவதும் பெண் மக்களே என்று கூறுவது மிகையாகுமோ? பெண்மக்களின் உதரத்தில் தோன்றிய குழவியானது பத்து மாதங்கள் வரை அந்தத் தாயின் ஆகாரத்தை யுண்டு ஒவ்வொரு நாடியும் அந்தத் தாயின் குணங்களிலேயே பழகிப் பழகி தாயானவள் தன்னு கிற எண்ணத்திலேயே ஈடுபட்டுப் பிறக்கிறதென்பதை மக்கள் மறந்தே போகின்றனர். பிள்ளை பிறந்த பிறகும் அது தனக்குத்தானே போதிய அறிவுண்டாகிறவரை தாயின் குணம் செயல் பழக்கம் முதலியவற்றிலே பழகிவருவதால் தாயின் குணம் செயல் பழக்கம் முதலியவைதாம் குழந்தையின் குணமாக முடிந்துவிடுகிறது. இதனைக் கூர்ந்து கவனித்தல் வேண்டும்.

* * *

கற்குணமும் நல்லொழுக்கமும் நல்லறிவும் நல்ல பழக்கமுமுடைய நல்ல தாயினல் பெற்று வளர்க்கப்படுங் குழந்தைகளே உலகிற் சிறந்து விளங்குகின்றன வென்பது ஆராய்ந்து பார்ப்பதற்கு எளிது. புலப்படும். அன்னையின் [illegible] க்குணமும் நீ யொழுக்கமும் [illegible] தனையும் கெட்டோ [illegible] தாய்மார்கள் பெறுங் குழந்தை [illegible] பெண் [illegible] சங்களாலே மறைப்பியலும் [illegible] திப்பார்க்கு விளங்காமற்போ [illegible].

* * *

இதுகால மக்கள் கேவலம் மாமிச [illegible] இச்சையை நீக்கிக் கொள்வதற்கே [illegible] [illegible] பிள்ளை வேண்டுமென்று விரும்புகிற [illegible] ளாயினும் இன்றியமையாத [illegible] களில் விருப்பங்கொள்ள விரும்பு [illegible]. இத்தகைய உணர்ச்சியானது [illegible] பெண் மக்கட்கு உண்டாகிற வரை நல்ல பிள்ளைகளைக் காண முடியாது. பெண் மக்கட்குத் தற்போதிருக்கிற மனநிலையானது மாற வேண்டும். பண்டைக் காலத்திலிருந்த பெருமக்களது உணர்ச்சியானது பெண் மக்களது மனதிலுதிக்க வேண்டும். [illegible] அடிமைப் புத்தி மாற வேண்டும். [illegible] கள் அவர்களும் 'ஒரு மனித உருவம்; அவர்கட்கும் இன்ப துன்பம் முதலிய எவையுமுண்டு; அவர்களும் கஷ்ட [illegible] விடுதலை கட்டும்' என்று கருதுதல் அவசியமாகும்.

* * *

முதன் முதலில் பெண் மக்களது உடலைப் பாதுகாக்கும் விஷயத்தில் சிறந்த உதவி புரிதலவசிய மாகும். மழையிலும் பனியிலும் வெயிலிலும் போட்டு [illegible] அடுப்படியிலேயே நான்கு காலம் [illegible] வாட்டிக் காலத்திலும் உணவு [illegible] ட்டாது துன்பப்படுத்துகிற வழக்கத்தைத் தொலைத்தல் அவசிய மாகும். உடம்[illegible] சிறிது கவனிக்கப்பட்டோனும் [illegible] க்கும் புத்தி முதலிய [illegible] திருந்த வெளிவரும். [illegible] ட்டு [illegible] தவிட்டார் [illegible].

நமது பெண்களும் புனர் விவாஹம் செய்துகொண்டாலென்ன?

—:0:—

(மகிபாலன்பட்டி, ஸ்ரீமாந் மு. சின்னையா செட்டியாரவர்கள் எழுதுகிறார்கள்.)

காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து எல்லாப் பழக்க வழக்கங்களும் மாறுதலடைய வேண்டு மென்பதை அறிஞர்கள் மறுக்கமாட்டார்கள். நமது விவாஹ விஷயம் எல்லையில்லாத பணத்தேவை யுடையதாகி விட்டதென்பதும், அதனால் சமூகம் திணறுதலடைந்திருப்பதும் யாவருமறிந்தனவே. இந்தக்கஷ்ட நஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டுச் சமூகாபிமானிகள் பெருங் கூட்டமொன்றைக் கூட்டிவைத்தும் தீர்மானஞ் செய்தும் பயன் றாவில்லை. அதன்மேல் ஊழிய சங்கத்தார் அன்னிய ஜாதியிற் பெண்ணெடுத்துத் தருவதாகக் கூவிக் கூவியழைத்தும் மாப்பிள்ளைகள் வந்தா ரில்லை. வேறு என்னதான் செய்வது? பெண்களுக்குப் பணமோ முன்னையினும் இரு மடங்காகிவிட்டது. சமூகம் பலவழியாலும் அபிவிருத்தி குறைந்து சக்தியுமிழந்து வருகிறது. பொறுப்பேற்ற தலைவர்கள் யாருமில்லை. பணப் பெருக்குடையோர் பின்னும் பணந்தேடுவதிலேயே நாட்டமுடையோராயிருக்கின்றனர். செல்வாக்குள்ள ஒரு சிலர் கடலிற் பெய்த மழைபோல் அனாவசியமான காரியங்களில் அதை உபயோகித்துக் கொண்டிருக்கின்றனர். சாமான்ய ஜனங்கள் எதையும் சொல்வதற்கும் செய்வதற்கு மஞ்சி மௌனமாயிருக்கின்றனர். சமூகம் மாலுமியில்லாத மரக்கலம்போல் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் தக்கதான வோர் பரிகாரத்தைத் தேடுவது அபிமானிகளின் கடமை யன்றோ? மனிதன் இந்த உலகத்தில் வாழும் நாட் கொஞ்சமே. அதிலும் அவனுக்கு வேண்டியது மிகவும் கொஞ்சம். ஆசையும் பாசமுமே அதிகமாக இருக்கின்றன. உற்று நோக்கினால் ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் நல்ல காரியமொன்றைச் செய்து தீர வேண்டுமென்பது புலப்படும். வீணாக உண்டு உடுத்துத்திரியும் வாழ்வை நம்பிச்சாவை மறந் துழலும் மக்களாற் பயனென்ன? அவர்தம் செல்வமும் செல்வாக்கும் என்ன பய னுடைத்து? நல் வினைப் பயனாற் கிடைத்த நலன்களைக் கொண்டு தம் சமூகத்தையாவது அபிமானித்து வேண்டுவன செய்து தம் பின் சந்ததியாருக்கு நேரும்கஷ்ட நஷ்டங்களை நீக்கிவைக்காதாரின் செல்வமும் செல்வாக்குமென்ன பயனுடைத்து? சமூகத்தில் மற்றெல்லாக் காரியங்களிலும் விவாக விஷயம் முக்கியமானதாகும். விவாக விஷயத்தில் நமது சமூகம் பெருந் தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறது. பால்ய விவாகத்துக்குக் குறைவில்லை. பாலர்கட்குப் பருவப் பெண்களை மணப்பது நின்றபாடில்லை. கிழவர்கள் மறு மணஞ் செய்துகொள்ளத் தயங்க வில்லை. அவர்களுக்குப் பெண் கொடுப்போரும் பின் வாங்கவில்லை. எல்லாம் அசம்பவமாகவே நடக்கின்றன. இதிப்படியாக மற்றொரு புறம் பிள்ளைகட்குப் பெண்கள் கிடைக்காமலும் பெண்களுக்குப் பிள்ளைகள் கிடைக்காமலும் கஷ்டமுண்டாகிறது. இன்னுமொருபுறம் பத்தாயிர முதல் ஐம்பதாயிரம் வரை பணங் கொடுபடுகிறது. இப்படிப் பலதுறைகளிலும் சமூகம் கஷ்ட நஷ்டமடைந்து வருவதை விரித்து விரித்துக் கூறவேண்டியதில்லை.

இத்தகைய கஷ்ட நஷ்டங்கள் தீர வேண்டுமானால், சமூகம் அதி தீவிரமாக விருத்தியடைய வேண்டுமானால், பணத்தேவையும் வீண்செலவும் குறையவேண்டுமானால், இன்னும் பல நலன்களையும் சமூகம் அடைய வேண்டுமானால், ஒரே ஒரு பரிகாரந்தானுண்டு. நான் பல்லாண்டுகளாகப் பன்முறை சிந்தித்துப் பார்த்தும் எல்லாக் கஷ்ட நஷ்டங்களையும் ஏக காலத்திற்போக்கத்தக்க பரிகாரம் வேறொன்றும் புலப்படவில்லை. ஒரே ஒரு வழிதான் தோற்றுகிறது. புருஷர்களைப்போற் பெண்களும் புனர் விவாகம் செய்துகொள்ளும் உரிமையுடையவர்களாக வேண்டும். ஆனால் அப்படிச் செய்வதில் சில தீமைகளு முண்டென்பதை நான் மறுக்கவில்லை. தீமைகளினும் நன்மையே அதிக மென்பதிற் சந்தேகமில்லை. எல்லாக் காரியங்களினும் நன்மையும் தீமையு முண்டு. உண்பதிலும் உறங்குவதிலும் கூட நன்மையும் தீமையு முண்டு. எனினும் அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ளல் வேண்டும். ஆதலால் தீமையினும் நன்மையே மிகுந்த பெண்களின் புனர்விவாகத்தை நமது சமூகம் ஆதரித்தால், யாதோ ரிடையூறுமின்றிச் சமூகம் அபிவிருத்தி யடையுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

அனுபவத்தில் இதொரு பெருங்காரியமென்பதிலும் சந்தேகமில்லை. ஆயினும் என் செய்வது? கருங் கடலையும் அடிக்கடி தாண்டிச்செல்லும் அனுபவமுடைய நமது சமூகத்துக்கு இது முடியாத காரிய மன்று.

ஆனால் இவ்விஷயம் இவ்வொரு வியாசத்தில் முடிந்து விடக்கூடாது. அபிமானிகள் இவ்விஷயமான ஆக்ஷேப சமாதானங்களைப் பற்றித் தங்குதடையின்றி அவரவர் மனத்திலுள்ளதை உள்ளபடி ‘குமரனி’ல் அல்லது ‘ஊழியனி’ல் எடுத்துக்கூறிச் சிலகாலமாவது வாதிக்க வேண்டும். அப்போதுதான் இதன் தன்மையைப் பலருமறிந்து கிளர்ச்சி யுண்டாகும். கிளர்ச்சியின் போக்கு முதலில் விரோதமாக இருந்தாலும் முடிவில் நல்ல பலனையே தருவதாகும்.

இவ்விஷயத்தில் சுருதி யுக்தி அனுபவ சம்பந்தமான எந்த வகையிலும் அன்பர்கள் ஆக்ஷேப சமாதானங்களை எடுத்தெடுத்துக் கூறவேண்டும். அப்படி எழுதும்போது ஒருவரை யொருவர் நிந்தித்தல் மட்டும் கூடாது. விஷயத்தின் மேற் செல்வதே அழகாகும். அப்படி யெழுதி ஒரு கிளர்ச்சியையுண்டாக்குதல் மிகவும் அனுகூலமாக இருக்குமென்பதுபற்றியே இப்போது இவ்விஷயத்தை முதலில் எழுதினேன். மகாத்மாவுங்கூட இதை ஆதரித்திருக்கிறா ரென்பது நண்பர்கட்குத் தெரியும்.

சந்திரமண்டலத்தின் மீது அஸ்திரப் பிரயோகம்.

—0—

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் ஒர்ஸெஸ்டர் சர்வகலாசாலையில் சாஸ்திரப் பிரிவில் தலைவராயிருக்கும் புரபஸர் ராபர்ட்டு எச் காடார்டு என்பார் வருகிற வேனிற்காலத்தில் சந்திரமண்டலத்துக்கு ஒருபாணம் அனுப்பப்போகிறாராம். அந்த பாணமானது அதிக சக்தி வாய்ந்த வாயுக்களைக் கக்கி ஓயாது எரியும். அந்த வாயுக்களே அந்த பாணத்தை வாயுமண்டலத்தின் ஊடே கனத்த வேகத்துடன் நெட்டித்தள்ளக் கூடியனவா யிருக்குமாம்.

“வருகிற வேனிற்காலச் சோதனைகளின் முடிவைப்பற்றி நான் ஊகிக்கத் தக்கது ஒன்றுமில்லை. நாங்கள் அவ்விஷயத்தை எங்கள் பரிசோதனைச் சாலையில் பலதரம் சோதித்துப் பார்த்திருக்கிறோம். ஆனால் சில முடிவான தீர்மானங்களைக் கண்டு இம்முயற்சியின் எளிய தன்மையைக் காண்பிக்க விரும்புகிறோம். நாங்கள் எது செய்தபோதிலும் இந்த வேனிற்காலத்திலேயே செய்து தீரவேண்டும். அதற்குக் காலம் கிட்டிவிட்டது. இப்போதுள்ள சில சாதனங்கள் இனிமேல் கிடைக்காமற் போகலாம்’ என்று புரபஸர் காடார்டு கூறினார்.

அவர் உபயோகிக்கும் பாணமானது இலேசான எஃகுவினால் செய்யப்பட்டதாகும். அது ஒடுங்கியதாய்ப் புகைச் சுருட்டைப் போல் நுனி சிறுத்துச் சுமார் பதினைந்து பவுண்டு நிறையுள்ளதாயும் [illegible]அடி நீளமுள்ளதாயுமிருக்கும். இந்த அஸ்திரத்தைப் பொருந்த சக்தியுள்ள யந்திரத்தால் எய்வதில்லை; அஸ்திரம் தானே உந்தித் தள்ளும். புகையில்லாத ஒரு வஸ்துவினால் எரியூட்டப்பட்டுக் கடும் விசையுடன் வாயுக்களை வெளிவிடும் ஒரு எஞ்சினால் அந்த அஸ்திரமானது உந்தித் தள்ளப்படும். வேகத்தில் சுடும் [illegible]ப்பாக்கியைப் போலவே இந்த பாணமும் வேலைசெய்யும்; ஒரே குழாயில் அடுத்தடுத்து எரியூட்டக் கூடிய ஒரு நுண்ணிய இயந்திரம் இந்த அஸ்திரத்தில் அடங்கியிருக்கும். சந்திரனிடத்திலிருந்து வரும் ஒளியைப் பின்பற்றி அந்த அஸ்திரம் செல்லுமெனச் சொல்லப்படுகிறது.

சந்திரனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் ஏறக்குறைய இரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் மைலாகும். இந்தத் தூரத்தை மேற்கூறிய அஸ்திரம் ஒன்றரை நாளுக்குச் சற்று அதிகமான காலத்தில் கடந்து விடுமென புரபஸர் காடார்டு கூறுகிறார். பாணத்தின் கதியானது, பூமியின் ஆகர்ஷணத்திலிருந்து அது விடுபட்ட பிறகு சந்திரனில் போய் வேகமாய்த் தாக்காமல் அதனிடம் மெதுவாய் இறங்குமாறு ஒழுங்கு செய்யப்படும். அஸ்திரம் செல்வதை மிகப் பெரிய சக்தியுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்துக்கொண்டிருப்பர். சந்திரனில் போய்ப் பட்டதும் கண்ணுக்குத் தெரியும்படியாக அந்த பாணத்தில் பட்டவுடன் தீப்பிடித்து எரியக்கூடிய வஸ்து வைக்கப்பட்டிருக்கிறது.

காரைக்குடியில் உபசாரக்கொண்டாட்டம்.

ஸ்ரீமாந் ஆவி.பள. சிதம்பரம்செட்டியார் அவர்களுக்கு ராவ்பகதூர் பட்டம் சமீபத்தில்அர்சாங்கத்தாரால் அளிக்கப்பெற்றதைப் பாராட்டிக் காரைக்குடி நகரத்தாரால் ஒரு சந்தோஷ உபசாரம் நிகழும் ரக்தாக்ஷி ஆனி கூ௳ ஞாயிற்றுக்கிழமை மாலை ங-மணிக்கு ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர வித்தியாசாலைக் கட்டிடத்தில் நடைபெற்றது.

உள்ளூர் வெளியூர் நகரத்தாருக்கும் ஏனைய பிரமுகருக்கும் அழைப்புக் கார்டுகள் அனுப்பப் பெற்றிருந்தன. பியாண்டு, மேளம், ஏராளமான நாட்டுவாத்தியங்கள், யானை முதலிய விருதுகளுடன் வாசகசாலையிலிருந்து ஆனரபிள் ஸர் மு அ அண்ணாமலை செட்டியாரவர்கள் K. T. யும் ராவ்பகதூர் ஆவி பள சிதம்பரம் செட்டியாரவர்களும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர ஹைஸ்கூலுக்கு அழைத்துவரப் பெற்றார்கள். நகரத்தாரும் ஏனையோரும் ஏராளமாய்க் கூடியிருந்தனர். எல்லோருக்கும் சிற்றுண்டியும் சந்தன தாம்பூலமும் வழங்கப்பெற்றன. பிறகு சஇ-மணி சுமாருக்கு எல்லோரும் பிரசங்கஹாலில் கூடினர். முதன் முதலில் தேவாரம் திருப்புகழ்ப் பாக்கள் இன்னிசையுடன் ஓதப்பெற்றன. அதன்மேல் ஸ்ரீமாந் சித நா ராம நாராயணன் செட்டியாரவர்கள் “ஸர் மு அ அண்ணாமலை செட்டியாரவர்கள் இந்நகர் நகரத்தார் வேண்டுகோளுக்கிணங்கிப் பல வேலைகளுக் கிடையே அவகாச மேற்படுத்திக் கொண்டு இவ்விடம் விஜயம் செய்து இக்கொண்டாட்டத்திற்கு அக்கிராசனம் வகிக்க இசைந்தமைக்காக இவ்வூர் நகரத்தார் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்க’ளென்று உபசாரமொழிகள் சில கூறினார்கள். அதன்பிறகு ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் எழுந்து “நமது நாட்டில் பெரும்புகழ் பெற்று விளங்கும் இந்நகர வாசியும் இந்நகர ஸ்தலஸ்தாபனத் தலைவருமாகிய ஸ்ரீமாந் ஆவி. பள. சிதம்பரம் செட்டியாரவர்களது பெருங் குணத்தையும் ஔதாரியத்தையும் மதித்து அரசாங்கத்தார் “ராவ் பகதூர்” பட்டம் அளித்ததற்காக நகரத்தாராகிய நாமெல்லோரும் கூடி நமது சந்தோஷத்தையறிவித்தற் பொருட்டு நகரத்தார்களால் அழைக்கப் பெற்று இங்கு கூடியுள்ளோம். ஸ்ரீமாந் சிதம்பரம் செட்டியாரவர்களின் பொது ஜனோபகாரம் எங்கும் பிரசித்தமானது. இப்போது நாம் கூடியிருக்கும் இந்த ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வர வித்தியாசாலையே அதற்கு அத்தாட்சியாகவுள்ளது. கோவிலூர் — குன்றக்குடி சாலையும் ஸ்ரீமாந் செட்டியாரவர்களின் பெரு முயற்சியினாலேயே ஏற்பட்டதாகும். சிதம்பரத்தில் ஒரு போஜனசாலையும் அந்நவரின் ஆதரவில் நடைபெற்று வருகின்றது. சமீபத்தில் மதுரையில் பெண்கள் சிசுக்களுக்காக ஓர் வைத்தியசாலை ஏற்படுத்துவதற்குப் பெரும் பொருளுதவி செய்திருக்கிறார்கள். ‘திரைகட லோடியும் திரவியம் தேடு’ என்ற முதுமொழியைக் கடைப் பிடித்து, எவ்வகுப்பினரிடத்துமில்லாத வழக்கமாகிய தூரதேசங்களுக்கு வருஷக் கணக்காய்ப் பெண்டுபிள்ளைகளை விட்டுச் சென்று பொருள்தேடுவது நம் மரபினர்க் கியல்பு. அவ்வாறு கஷ்டப்பட்டுப் பொருளீட்டுவதற்கும் இக்காலத்து உலகமெங்கும் வழங்கி வரும் இராஜபாஷை யாகும் ஆங்கிலத்தை நாம் கற்கவேண்டியது அவசியமாகும். இவ்விதமான ஆங்கிலக் கல்வியை முறையே போதிக்கக்கூடிய பாடசாலை யொன்று நமது தனவைசிய நாட்டுக்கு நடு நாயகமாக விளங்கும் காரைக்குடியில் ஏற்படுத்தி அதனை நன்கு நடைபெறப் பார்ப்பதற்காக ஸ்ரீமாந் சிதம்பரம் செட்டியாரவர்களுக்கு நாமெல்லோரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பாடல் ஸ்தலங்களாகிய தேவாலயங்களைக் கல் திருப்பணி செய்து ஏராளமான பொருளைச் செலவிட்டு முறையே கும்பாபிஷேகம் செய்வதினால் எய்தக்கூடிய பலன் இதுபோன்ற கல்விச்சாலையை ஏற்படுத்தி ஆன்மாவாகிய தெய்வத்திற்கு அறிவாகிய ஆலயங்களை விளக்குவதால் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை. இதனை யடுத்து இந்நகர்ப்பெண்களுக்காக ஒரு பாடசாலையை நன்கு நடத்திவரும் ஸ்ரீமாந் மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியாரவர்களும் நீங்களும் இந்தக் கல்வி யாலயங்களை மேன்மேலும் விர்த்தியாக நடைபெறச் செய்யக் கடவீர்கள். இவற்றில் செலவிடும் பொருள் சரியான, நியாயமான மார்க்கத்தில் செலவிடப்படுகிறதென எல்லோரும் ஒப்புக்கொள்வர்” என்று பேசி முடித்ததும், நகரத்தாரால் ஸ்ரீமாந் சிதம்பரம் செட்டியாரவர்களுக்கு வெள்ளிக் குழலில் அடைத்து அளிக்கப்பெற்ற வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப் பெற்றது. பின்புவர முடியாதவர்களிடமிருந்து வந்த தந்திகளும் கடிதங்களும் வாசிக்கப்பட்டன. அப்பால் காரைக்குடி வித்வான் சு. சிதம்பரமையரவர்கள் எழுந்து முன்னாளில் மூவேந்தரும், முக்கியமாய்ச் சோழமன்னர்கள், ‘வெள்ளி நாள்’ என்னும் பிறந்த நாளன்று பிரஜைகளில் பலருக்கும் பலவித கௌரவப் பட்டங்கள் கொடுப்பதுண்டென்றும் அதில் காவிரிப்பூம்பட்டினத்தில் அந்நாளிலிருந்த தனவைசியரின் முன்னோருக்கு ‘எட்டி’ என்ற பட்டம் அளிக்கப்பெற்றதென்றும் ஸர். மு, அ. அண்ணாமலை செட்டியாரவர்களின் பெருமையையும் ஸ்ரீமாந் சிதம்பரம் செட்டியாரவர்களின் ஔதாரியத்தையும் பாராட்டியும் சில மொழிகள் கூறினார்கள். அதன்மேல் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வர வித்யாசாலை சாஸ்திரப் போதகராகிய ஸ்ரீமத் இராமாநுஜ ஐயங்காரவர்களும் அவருக்குப் பிறகு கம்பநாடர் ஆசிரியராகிய ஸ்ரீமத் மோ. வே. கோவிந்தராஜ ஐயங்காரவர்களும் ஹைஸ்கூல் போதகாசிரியர் ஸ்ரீமத் என். பலராமையரவர்களும் ஸ்ரீமாந் பெரி. க. நாகப்ப செட்டியாரயர்களும் முக்கிய விருந்தினராகிய ஸ்ரீமாந் சிதம்பரம் செட்டியாரவர்களின் அருங்குணத்தைப்பற்றி சின்னேரம் பேசினார். இறுதியில் அக்கிராசனர் தக்கமுடிவுரை கூறியபின் சபை கலைந்தது. அப்பால் பாடசாலைக்கட்டிடத்தின் மேன்மாடியிலேயே ஒரு வீணைக்கச்சேரி நடைபெற்றது.

சிவநேசர் திருக்கூட்டம்.

—0—

இத்திருக்கூட்டத்தார் இரக்தாக்ஷி ஆண்டு ஆனித் திங்கள் முதல் நாள் ஆவினிப்பட்டியில் சிவாலய தெரிசனஞ்செய்து இரண்டாம் நாள் முற்பகல் பிற்பகல் இரண்டு நேரமும் பலவான்குடி ராம. கு. ராம. இராமசாமி செட்டியார், காரைக்குடி மெ. பெரி. ராம. மெ. ஞானசம்பந்தச் செட்டியார், கா. கா. அள. காளையப்ப செட்டியார், சேவு. மெய்யப்ப செட்டியார், முத்த. வெ. சொக்கலிங்க செட்டியார், கண்டனூர் தெ. அரு. சித. இராமநாதச் செட்டியார், கோநகர் சுப்பிரமணிய சிவம், கீழைச்சிவற்பட்டி வ.மு. இரத்தினேசுவரையர் ஆகிய சிவநேசச் செல்வர்கள் சைவப்பிரசங்கஞ் செய்தனர். அன்றிரவு இளையாற்றக்குடி வந்து சிவாலய தெரிசனஞ் செய்து ஆங்கு குன்றக்குடி சிவநேசச் செல்வர் வேங்கடநாராயண சாஸ்திரியார், சதாசிவப் பிரமம் ஆகிய இருவரும் சைவப் பிரசங்கஞ் செய்து சிவத் தொண்டு புரிந்தனர். திருப்பெருந்துறையில் ஆனித் திங்கள் கசு-ம் நாள் தொடங்கி உச-ம் நாள் வரை நடைபெறும் திருவிழாவுக்கு அன்பர்கள் விரும்பிய வண்ணம் உ௦-ம் நாட் சென்று தெரிசனஞ் செய்து உகு-ம் நாள் திரும்புவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். உகு-ம் நாள் கண்டனூரில் வந்து பழய மடத்தில் தங்கி திருவமுதுண்டு ஆங்கு நடை பெறும் திருவிழாவைத் தரிசிப்பார்கள். இத்திருக்கூட்டத்தார் நிகழும் ஆனித் திங்கள் நக, நஉ திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் உய்யக்கொண்டான் சிறுவயலிற் கூடி உரிய சிவத்தொண்டு புரிவார்கள் என்று காரியதரிசி எழுதுகிறார்.

புதுவயல்.

இவ்வூரில் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் உச-வது மாதக்கூட்டம் ஆனிமீ உ௳ திருவாளர் வீர. பழனியப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது ‘கல்வி’ என்பதைப்பற்றி பழ. இராமநாதனும் ‘சூது’ என்பதைப்பற்றி சா. சிதம்பரமும் ‘செய்ந்நன்றி யறிதல்’ என்பதைப் பற்றி ராம. வீரப்பனும் பேசிய பின்பு முடிவுரை கூறி சபை நிறைவெய்தியது என்று காரியதரிசி சா. சிதம்பரம் எழுதுகிறார்.

ஈப்போ.

வழிப்பறி:—மாலிம்நாவார் ரப்பர்தோட்டத்திற்குச் சென்ற இவ்வூர் நா. வயி. நா. நா. கருப்பையாப் பிள்ளையையும் சுப. லெ. ராம. கடை இராமசாமிச் செட்டியாரையும் நாளிது வைகாசிமீ உ௩௳ காலை கூ-மணிக்கு மாலிம் நாவார் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தோட்டத்திற்குச் செல்லும் வழியில் புதரில் பதுங்கியிருந்த சில சீனர்கள் மறித்துக் கொண்டு பலமாக அடித்துத் தலையில் கத்தியால் வெட்டி விட்டுச் சுமார் ரிங்கி அ௦௦-யும் எடுத்துக்கொண்டு போய் விட்டனர். கருப்பையாபிள்ளை தலையில் கதர்த்துண்டு கட்டியிருந்தபடியால் கத்தியின் வெட்டுக்குக் கொஞ்சம் தப்பிததுக்கொண்டார். மேற்படி திருடர்களைக் கண்டு பிடிப்பதற்கு அரசாங்கத்தார் முயற்சித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்தனைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

—அருணகிரிநாதர்.

குமரன், காரைக்குடி.
ரக்தாக்ஷி௵ ஆனிமீ ௧௨௳.

தாடகேஸ்வரம் சத்யாக்ரகம்.

—:o:—

தாடகேஸ்வரம் என்னும் சிவஸ்தலம் வங்காளத்தில் கல்கத்தாவுக்கு முப்பத்தேழு மைல் தூரத்தில் ஈஸ்டு இந்தியன் ரெயில்வேயில் உளது. இங்குள்ள சிவாலயம் மிகப் புராதனமானதென்று கருதப் படுவதாற் பெருந் தொகையான இந்து பக்தர்கள் அங்குச் சென்று வருகின்றனர். தென்னாட்டிலிருந்து வடநாட்டுக்கு யாத்திரை செல்வோரும் தாடகேஸ்வர ஸ்தலத்துக்குப் போய் வருவதுண்டு.

தென்னாட்டில் பல தேவாலயங்களுக்கும் மடங்களுக்கும் பரிபாலன கர்த்தர்களாக முற்றத் துறந்த சந்நியாசிகள் 'மடாதிபதிகள்' என்னும் பட்டத்துடனும் அதற்கேற்ற விருதுகளுடனும் ஏற்பட்டிருப்பது போலவே, தாடகேஸ்வரத்திலுள்ள சிவாலய காரியங்களையும் அதனைச் சேர்ந்த சொத்துக்களையும் பரிபாலிப்பதற்கு 'மகந்து' என்ற பட்டந் தாங்கிய ஒரு சாதுவை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். முன்னாளில் தென்னாட்டிலிருந்த மடாதிபதிகள் உண்மையான சமய ஞானமும், தெய்வ பக்தியும், செந்தமிழ்ப் பயிற்சியும் குற்றமற்ற துறவொழுக்கமும் பொருந்தியவரா யிருந்து, மடங்களையும் அவற்றைச் சார்ந்த ஆலயங்களையும் நன்கு பரிபாலனம் செய்து வந்ததைப் போலவே, தாடகேஸ்வரத்தின் முன்னைய மகந்துக்களும் நன்னெறி பற்றி அவ்வாலயத்தைப் பரிபாலித்து வந்தனர்.

தாடகேஸ்வரத்தில் தற்போதிருக்கும் மகந்து தெய்வத்துக்கும் பொது ஜனங்கட்கும் தாம் செலுத்த வேண்டிய கடமையை மறந்தவராய், அவ்வாலயத்துக்குச் சொந்தமாகிய ஏராளமான சொத்துக்களையும் தமது அநுபவத்தின் பொருட்டு உபயோகப்படுத்தி வருவதுமன்றிச் சுவாமி தரிசனத்தின் பொருட்டு அங்குச் செல்லும்பக்த கோடிகளைத் துன்புறுத்தியும் குற்றமற்ற கற்புடைமகளிரைப் பலாத்காரம் செய்தும் வந்ததாக நெடுநாளாய்க் குறை கூறப்பட்டு வந்தது. அதன் பேரில் சிலர் முன் வந்து இவ்விதம் அடாது செய்து வரும் மகந்துவை அந்த ஸ்தானத்தினின்றும் நீக்க வேண்டுமென நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றனர். அவ்வழக்கு இன்னும் முடிவு பெறவில்லை.

இவ்வா றிருக்கையிலேயே அம்மகந்து தன் துர்ச்செயல்களை விடாது நடத்தி வந்ததாகச் சொல்லப்படுகிறது. சொத்து ஏராளமாய் அவரது நிர்வாகத்திலிருப்பதால், பொருளுதவியினால் முரடர்களைச் சகாயம் கொண்டு எதற்கு மஞ்சாது தமது காரியங்களை நடத்தி வந்திருக்கின்றனர். இதனால் பொது ஜனங்களின் ஆத்திரம் மிகுதியும் தூண்டப்பட் டிருப்பதாகத் தெரிய வருகிறது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் கல்கத்தா காங்கிரஸ் சபையின் ஆமோதிப்பின் பேரில் சில சாதுக்கள் சத்யாக்ரக முறையைப் பின்பற்றித் தாங்களாகவே தாடகேஸ்வரத்தில் பெருத்த மாளிகையில் வீற்றிருந்து அடாதன செய்துக் கொண்டிருக்கும் மகந்துவை அப்புறப்படுத்த முன்வந்தனர். ஆனால் அதிகாரிகள் மகந்துவின் சார்பிலிருப்பதால் அது சுலபமாக முடியக்கூடிய காரியமெனத் தோற்றவில்லை.

இப்போது மகந்து பேரில் நீதிஸ்தலத்தில் வழக்கு நடந்து கொண்டிருப்பதால் அது முடியும் வரையில் சத்தியாக்ரகிகள் பொறுத்திருப்பது நலமென்று அரசாங்கத்தார் கூறினர். எனினும் வங்காளச் சாதுக்களின் தலைமையில் ஆரம்பிக்கப் பெற்ற சத்யாக்ரகம் தடையின்றி நடைபெற்று வருகின்றது. சத்யாக்ரகத்தில் சம்பந்தப்பட்டு வேலை செய்வதற்காகப் பலர் தொண்டர்களாய் முன் வந்திருக்கின்றனர். ஸ்ரீமாந் தாசரும் சத்யாக்ரகத்தை அங்கீகரித்திருப்பதாகச் சொல்லப்பட்டது. ஒவ்வொரு நாளும் சில தொண்டர்கள் மகந்துவின் மாளிகைக்குள் நுழையப் பிரயத்தனப் படுவதும் அங்குக்காவலிருக்கும் போலீசாரால் கைது செய்யப்பட்டு சிராம்பூர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தண்டனை பெறுவதுமா யிருக்கின்றனர். இப்போது சத்யாக்ரகத்திற்குத் தலைமைவகித்துநின்ற சுவாமிசச்சிதாநந்தரும் மற்றும் சில சாதுக்களும் கைது செய்யப்பட்டுத் தண்டனைக்குள்ளாயினர். சத்தியாக்ரகம் ஆரம்பத்தில் அவ்வியக்கத்தில் தலைமை வகித்து நின்ற சாதுக்களின் உயிருக்குக்கூட மகந்துவின் ஆட்களால் அபாயம் நேரிடும் போலிருந்தது. இப்போது தாடகேஸ்வரத்தில் சத்யாக்ரகம், வைக்கத்தில் போலவே, அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற்று வருகிறது.

சத்யாக்ரகத்தின் அடிப்படையான அம்சமாவது, நேரே எதிர்த்துப் போராடி வெல்லுவதற்குப் போதிய பலமும் சந்தர்ப்பமும் கிட்டாத எளிய ஜனங்கள் தங்களைப் பாதிக்கும் எந்த ஒரு குறிப்பிட்ட முறையை மாற்றும் வரையில் இடைவிடாது அம்முறையை மீறி அதனால் வரும் கஷ்டங்களை அமைதியுடன் சகித்துக் கொள்வதால், தங்களுக்கு அம்முறையினிடத்துள்ள வெறுப்பை நன்கு விளக்குவதாம். இவ்வழியைப் பின்பற்றியே வைக்கத்திலும் தாடகேஸ்வரத்திலும் சத்யாக்ரகம் நடைபெறுகின்றது. பொறுப்புள்ள அதிகாரிகள் பொது ஜனங்களின் விருப்பத்தை யுணர்ந்து தக்கது செய்ய இசைவதற்குச் சிறிது தாமதப்படுவது சகசமே. என்றாலும் முடிவில் பொது ஜன அபிப்பிராயமே நியாயமானதாகையால், அதுவே நிலைத்து நிற்கக் கூடியதென்பது ஒரு தலை.

—

எண்டிசைக் காட்சி.

—o—

நன்கொடை.

கல்லுப்பட்டி ஸ்ரீமாந் ராம. செ. பழ. அழகப்ப செட்டியார் அவர்கள் தமது தமயனார் செல்லப்ப செட்டியா ரவர்கள் புத்திரன் சிரஞ்சீவி பழனியப்பனுக்கு நடந்த திருமணத்தில் நமது அச்சுக்கூடத்திற்கு ரூபா ரு நன்கொடை அளித்துள்ளார்கள். அவர்கட்கு நன்றி பாராட்டுகின்றோம்.

பிள்ளையார்பட்டி.

காரைக்குடியி லிருந்து கூட்டத்திற்கு மிகச் சிலரே சென்றிருக்கின்றனர். என்ன சிபார்சு செய்தாலும் நாள் தவணையிலும், நாழிகைத் தவணையிலும் வருவதாக கூறுகின்றனர். காரைக்குடியார் வராமையினாலே கூட்டம் நடைபெறவில்லை என்ற சொல் சாதாரணமாகிவிட்டது. என்றாலும் வெளியூர்களிலிருந்து வருபவர்களும் இதற்கு மேலாகவே யிருக்கின்றனர். மற்ற ஊர் நகரத்தார் வந்து கூடிக் கொண்டு காரைக்குடி நகரத்தாரைப் பார்த்து என்ன சேதி யென்று கேட்காமல் வீணுகக் காரைக்குடியார் மீது குறை கூறிக்கொண்டிருப்பதில் பயனொன்றுமில்லை. ஏதாவது ஒரு வழியில் துணிந்து இறங்கவேண்டும்.

அமராவதி பாலம்.

புதிதாக கட்டப்பட்ட கரூர் அமராவதிப் பாலத்துக்கு பெத்தாச்சி செட்டியார் பாலம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று கரூர் முனிசிபாலிடியார் தீர்மானம் செய்து ஜில்லா போர்டுக்கு அனுப்பி யிருந்தார்கள். அதனைத் திருச்சி ஜில்லா போர்டார் நிராகரித்து விட்டுத் தேசிகாச்சாரியார் பாலம் என்று பெயரிட்டு அழைக்க வேண்டுமென்றுதீர்மானித்திருக்கிறார்கள். இக்கூட்டத்திற்கு டி சர். டி. தேசிகாச்சாரியாரே தலைமை வகித்திருக்கிறார். கொடை வள்ளலான பெத்தாச்சி செட்டியார் திருச்சி ஜில்லாவிலும் உபயோகமுள்ள பலவழிகளிலும் பெரும் பொருள் செலவிட்டிருக்கிறார் என்பது பலரறிந்த விஷயம். இவ்விஷயமாக ஜில்லா போர்டு அங்கத்தினர்களும் நடந்து கொண்ட முறை போற்றற்குரிய தன்று. ஆனால் பெத்தாச்சி செட்டியார் காலஞ் சென்று விட்டனரே.

கல்யாணத்தில் திருத்தம்.

கோட்டையூர் ஸ்ரீமாந் ராம. அழ. சித. சிதம்பரஞ் செட்டியார் அவர்களின் புதல்விக்கு நாளிது ஆனிமீ ௬௳ திருமணம் நடைபெற்றது. அத்திருமணத்தில் திருப்பூட்டுவதற்கு முதல் நாள் தங்கட்குக் கிடைத்த வரையில் எப்பொழுதாவது உபயோகப்படுத்தக் கூடியனவும், எப்பொழுதுமே உபயோகப்படுத்த முடியாதனவுமாகிய பல சாமான்களையும் விளைபொருள்களில் அகப்பட்டவரை வாங்கி ஆய்ந்து புடைத்து அழகுபடுத்திவைப்பதுமாகிய வழக்கம் புறக்கணிக்கப் பட்டது. இந்தக் சன்காட்சி சாலை இக்கல்யாணத்தில் திறந்து வைக்கப் படாதது பலருக்கும் சவுகரியமா யிருந்தது. இரு தரப்புக்கும் கல்யாண காலத்தில் செலவாகும் எல்லாப் பொருள்களையும் பெண் வீட்டாரே தயாரித்தனர். இம் முறையினால் எவ்வளவு சவுகரிய முண்டென்பது நமது மரபிற் பிறந்த ஒவ்வொருவரும் உணர்ந்ததேயாகும். எவ்வளவு அருமையான விஷயங்களையும் புறக்கணித்து விட்டு டம்பம் ஒன்றையே பெரிதெனக் கொண்டு ஆடி வருகின்ற பணக்காரர் மல்கி வரும் இக்காலத்தில் ஸ்ரீமான் சிதம்பரஞ் செட்டியாரவர்களின் அடக்கம் மிகவும் போற்றற்குரியதாகும். இம்முறை மிகச் சிறந்ததென்று பலர் அபிப்பிராயங் கொடுத்திருக்கின்றனர். இனி மேலாவது நமது சமூகச் செல்வர்களும் ஏனையோரும் இம்முறையைப் பின் பற்றுவார்களாக! சீர்திருத்த விவாகத்திற்குரிய மணமக்களிருவரும் சகல செல்வங்களும் பெற்று பன்னாள் வாழ்ந்திருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கவலை இல்லை.

ஜப்பானின் முக்கிய துறைமுகமானயோகஹாமாவில்நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமெரிக்கச் சரக்குகளை அடியோடு பஹிஷ்கரித்து விடுவதென்றும், இனி இந்தியப் பருத்தியை வரவழைப்பதென்றும், ஐரோப்பிய நாடுகட்கே பட்டு ஏற்றுமதி செய்வதென்றும் முடிவு செய்திருக்கின்றனர். பலமான பூகம்பத்தில் கணக்கிடமுடியாத இயற்கைப் பொருள்களும் செயற்கைப் பொருள்களும் அழிந்து போயின. அதனைக் கண்டு ஜப்பான் தேசம் பழய நிலைக்குவருவதற்குப்பல்லாண்டுகள் செல்லும் என்று கருதினர். ஜப்பானியரும் ஏனைய தேசத்தாரின் உதவியைக் கூட அப்பொழுது விரும்பினர். சில மாதங்களாக ஜப்பான் அமெரிக்காவுடன் போர் புரிந்து வெல்வதற்குத்தனக்குப் பலமுண்டென்ற நம்பிக்கையுடன் முன் போலவே காரியங்களை நடத்தி வருகின்றதென்பது புலனாகின்றது. இதுகாலை யோகஹாமாவில் செய்யப்பட்டிருக்கிற தீர்மானமும் இதனை வலியுறுத்துகிறது. தன்னரசு பெற்று கலை, தொழில், வாணிபம், ஆயுத பலம் முதலியவற்றில் சிறந்திருக்கும் தேசத்திற்கு எத்தனைகோடி நஷ்டம் வந்தாலும் தாங்குமாற்றல் உண்டு என்பதை ஜப்பான் விளக்குகின்றது. கைப்பலமுள்ளவனுக்குக் கவலையில்லை.

பஞ்சு விலை ஏறுமோ?

யோகஹாமாவில் நடைபெற்ற மகாநாட்டின் தீர்மானத்தை அத்தேசத்தார் நடைமுறையிற் கொண்டு வருவார்களாயின், நமது நாட்டில் பஞ்சு விலை ஏறுமென்று கருத இடமிருக்கிறது. இப்பொழுதே ஐரோப்பிய வியாபாரிகள் பருவகாலத்திற்கு முன்னரே பஞ்சை ஒப்பந்தம் செய்து விடுகிறார்களாதலால் பஞ்சு விலை ஏறியிருப்பதோடு கதரபிவிருத்தியும் சிறிது தடைப்படுகிறது. இனி ஜப்பானியரும் போட்டி போட்டுப் பஞ்சை வாங்க முன் வருவார்களானால் பஞ்சு விலை ஏறுமோ என்று அஞ்சுகிறோம்.

சினுக்குப் பட்டு!

நமது சகோதரிகள் உடலில் அணியப் பெற்று வருகிற—ஈசலிறகு போன்ற மெல்லிய—ஜப்பான் பட்டாடைக்குச் சினுக்குப்பட் டென்று பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டு அணியப் பட்டிருக்கும்போது அவ்வளவு அழகா யிராதுபோனாலும் நமது பெண்மக்கள் அதனை ஒரு சிறந்த ஆடையாகவே கருதுகின்றனர். யோகஹாமா தீர்மானப்படி இந்தியாவிற்குப் பட்டு ஏற்றுமதி நிறுத்தப்படுமானால் சினுக்குப் பட்டுக் கென் செய்வது? ஆனாலும் நமது ஜனங்கள் விடுவார்களா? ஐரோப்பாவிலிருந்து இங்கு வரவழைக்கப் படலாமன்றோ? ஆனால் விலை மட்டும், சுங்கச் சாவடிக் கட்டணமும் சேர்த்து, இரண்டு மடங்காகுதல் கூடும்!

பிரிவு வளர்கிறது.

முசம்மதியர்கள் நம் நாட்டில் தோன்றியதிலிருந்து நெடுநாளாக ஹிந்துக்களோடு பிளவுபட்டே நின்றனர். பல தேசாபிமானிகள் இவ்விரு சமூகத்தினர்களையும் ஒற்றுமைப் படுத்தப் பல நாளாக முயன்றும் விசேஷமான வெற்றியைத் தரவில்லை. இதுபோழ்து மஹாத்மாவின் திருவாக்காகிய தாம்பில் இரு சமூகத்தினரும் பிணிப்புண்டனர். பசுக்கொலை முதலிய கொடுமைகளும் ஆங்காங்கே அடங்கின. இரு சமூகத்தினரும் ஒருவரை யொருவர் சகோதர உணர்ச்சி கொண்டு நோக்கி வந்தனர். அரசாங்கத்தினரும் அச்சமுற்றனர். மஹாத்மா அவர்கள் சிறைக்கோட்டம் நண்ணியதிலிருந்து இந்து முஸ்லீம் வேற்றுமை மெதுவாகத் தோற்ற வாரம்பித்து ஒரு புறத்தில் வளர்ந்து வருகிறது. சில மாதங்கட்கு முன்னர் ஒரு முகம்மதியர் மஹாத்மா அவர்கட்கெழுதிய கடிதத்தில் முகம்மதிய மதத்தில் சேராதவர்க்கு கதிமோக்ஷம் கிடைக்காதென்றும் மஹாத்மா அவர்கள் இவ்வளவு சிறந்தவர்களாகவிருந்தும் கடைசியில் மோக்ஷம் சித்தியாகாது போகப் போகிறார் என்று தாம் வருந்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பதிலாகப் பிரபல ஆரிய ஸமாஜப் பத்திராசிரியரொருவர் ஒரு துண்டுப்பிர

தந்திச்செய்தி.

பினங்கு, ஆனிமீ க0உ

சென்னை உண்டியல் விலை	கசுச-0-0
ஈயம் விலை	க0க-0-0
ரப்பர் விலை	௫0-0-0

(த. வை. ஊ)

இரங்கூன், ஆனிமீ ககஉ

பெரிய ஆலை அரிசி	சஅஅ-0-0
சிறிய ஆலை அரிசி	௫உ௫-0-0
மில்சேர்	௫எ0-0-0
படகு நெல்	உக௫-0-0
ரயில் நெல்	உக0-0-0
வெள்ளை பீன்சு புதிது	௩00-0-0
,, பழசு	உஎ0-0-0
சிவப்பு பீன்ஸ்	௩ச0-0-0
கடலை	௩௫0-0-0
உளுந்து	ச00-0-0
துவரை	சஉ௫-0-0
தட்டப்பயறு	௫௫0-0-0
காராமணி	௩எ௫-0-0
பாசிப்பயறு	ச00-0-0
மொச்சை	சச0-0-0
அரிசிச்சோளம்	௩க௫-0-0
கோதுமை	சஎ0-0-0
பொற்காசு (பவுன்)	கசு-௩-0
தங்கம்	௩எ-சு-0
வெள்ளி	அ௫-ச-0
உண்டியல் வாங்கும் விலை	கசுக-அ-0
ஷை விற்கும் விலை	கசு௫-அ-0

பணம் நிதானம்.

சுரத்தை வெளியிட்டிருக்கிறார். அதில் மௌலானா முகம்மதலி இஸ்லாம் மதத்தை விட்டுச் சுத்தி செய்து கொண்டு வைதீக மதத்தைத் தழுவி இந்துவாகும்படி குறிப்பிடுகிறார். இம்மாதிரியான பிரசுரங்களால் விளையும் பயன் கலகமொன்றேயாம்.

கதரே கைவல்யம்!

சுயராஜ்யக் கக்ஷியில் சேர்ந்திருப்போரில் பெரும்பாலோர் கதரில் பூரண நம்பிக்கை கொள்ளவில்லை என்பது உலகறிந்த விஷயம். ஆனால் கதராலேயே சர்வ சுதந்தரத்தை அடையலாமென்று அன்று முதல் இன்று வரை மஹாத்மா அவர்கள் எடுத்தோதி வருகிறார்கள். சமீபத்தில் ராணுவ நிர்வாக சபைகளில் ஒத்துழையாதார் ஸ்தானம் வகிக்கலாமாவென்று கேட்டதற்குக் கதரைத் தீவிரமாகப் பரப்ப இட முண்டானால் புகலாமென்று மஹாத்மாவினிடமிருந்து பதில் வருகிறது. சட்டசபைப் பிரவேசத்தைப்பற்றி மஹாத்மா அவர்கள் கூறும்போது சட்டசபையில் புகுந்தாலும் நிர்மாண வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் புகுவதாகவே யிருக்க வேண்டு மென்றுங் கூறியுள்ளார்கள். இம்மாதிரி கதரியக்கம் உற்பத்தியானது முதல் இன்று வரை எந்த விதமான சுதந்திரத்துக்கும் கதரே முக்கிய காரணம் என்று மஹாத்மா அவர்கள் கூறுவது ஆழ்ந்து கவனிக்கத்தக்கதாகும்,

செய்தித்திரட்டு.

இவ்வருடத்திய இந்திய மன்னரின் கூட்டம் டில்லியில் வருகிற நவம்பர்மீ௳ முதல் உஉ௳ தேதிவரையில் கூடும்.

* *

மகாத்மா வருகிற ஆகஸ்டு மாதத்தில் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்படுவார்களெனச் சொல்லப்படுகிறது.

* *

கும்பகோணத்தில் சமீபத்தில் ஒரு ஜீவகாருண்ய சங்கம் ஏற்பட்டிருக்கிறது. அதன் நோக்கம் உயிர்ப்பலியைத் தடுத்தலும் மரக்கறி உணவையநுஷ்டிக்கப் போதித்தலுமாம்.

* *

தென்னாபிரிகாவில் சென்ற வாரத்தில் நடைபெற்ற தேர்தலினால் தளபதி ஸ்மட்ஸின் அதிகாரம் ஒழிந்து தேசியத் தொழிற்கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.

* *

சமீபத்தில் சென்னை யரசாங்கத்தின் கல்வியிலாகா மந்திரியாகிய கனர் ஸர் பத்ரோ அவர்கள் திருநெல்வேலி, மதுரை, திருச்சி முதலிய விடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து ஆரம்பக் கல்வியை கிராமங்கள் தோறும் பரப்புவதற்குரிய மார்க்கங்களைப் பற்றி ஸ்தல ஸ்தாபனங்களுடன் அளவளாவிச் சென்றார்.

* *

பிரசித்திபெற்ற கொள்ளைக்காரனை காலஞ்சென்ற ஜம்புலிங்கத்துக்குப் பிரதியாக கிருஷ்ணசாமி தேவன் என்பான் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் கொள்ளையடித்து வருவதாகவும் அவனைப் பிடிக்கப் பிரத்தியேகமான போலீஸ் படை தேடித் திரிகிறதென்றும் சொல்லப்படுகிறது.

* *

சென்ற வாரத்தில் இராமேஸ்வரத்தில் நடைபெற விருந்த இராமநாதபுரம் ஜில்லா காங்கிரஸ் சபை, இவ்வாரம் ஆமதாபாத்தில் கூடவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தின் முடிவைத் தெரிந்து கொள்வதற்காக, அடுத்த மாதத்தில் கூடுமென்று அறிவிக்கப்படுகிறது.

* *

சென்னை அரசாங்கத்தினர் வச்சிரம் செய்யும் தொழிலை நடத்திக் காட்டும் நோக்கத்துடன் கைத்தொழில் இலாகாவின் மேற்பார்வையில் ஒரு வச்சிரத் தொழிற்சாலையை ஏற்படுத்தி நடத்தி வந்தனர். அதில் அச்சாபீஸ்களுக்கு வேண்டிய வச்சிரமும் செய்யப்பட்டு வந்தது. ஆனால் அத்தொழில் நஷ்டத்துடன் நடை பெற்றதால் சிக்கனக் கமிட்டியார் அத்தொழிற்சாலையை எடுத்துவிடும்படி சிபார்சு செய்தனர். கைத்தொழில் இலாகா தலைவரும் அவ்வாறே செய்து விடும்படி கூறியதன்மேல் அத்தொழிற்சாலையை எடுத்துவிடும்படி அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கின்றனர்,

விழுப்புரம்-திருச்சி ரயில்பாதை போடுவதற்கு ஏற்கனவே போட்டிருந்த திட்டமாகிய கஎ௫ லட்சம் ரூபா திருத்தப்பட்ட திட்டத்தில் உஉ௫ லட்சம் ரூபாயாக உயர்ந்து விட்டதால் அவ்வேலையை ௩ மாதத்திற்கு நிறுத்திவைக்கும்படி ரெயில்வே போர்டு உத்தர விட்டிருக்கிறது. இந்த ரயில்வேயினால் கூடலூர் துறைமுகத்தின் ஏற்றுமதி வியாபாரம் புதுச்சேரிக்குத் திரும்பிவிடுமென ஆங்கில வியாபாரிகள் பயப்படுகிறார்கள்.

* *

அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் ஆமதாபாத்தில் ஸ்தல ஸ்தாபன மண்டபத்தில் நாளிது ஆனி மாதம் கச௳ வெள்ளிக்கிழமை யன்று கூடும். காங்கிரஸின் தற்போதைய நிர்மாணத் திட்டத்தைச் வாக்கிலேயன்றிச் செய்கையிலும் காட்டக்கூடியவரே காங்கிரஸ் நிர்வாக சபையில் ஸ்தானம் வகிக்க வேண்டு மென்றும் ஏனையோர் விலகிக்கொள்ள வேண்டுமென்றும் அப்படி அவர்கள் விலகிக்கொள்ளாவிட்டால் காங்கிரஸினின்றும் தாம் விலகிக் கொள்வதாகவும் மகாத்மா கூறுகின்றனர்.

தேவகோட்டை ஸ்ரீமாந் சித. முரு. வீரப்பசெட்டியார் காலஞ்சென்றார்.

பண்டைக்காலந்தொட்டு மிக்க கௌரவம் வாய்ந்த சமூகத்தினர்க்கு உற்றவிடத்து உதவிபுரிந்து செட்டியார்வீடு யென்ற பொது ஜனங்களின் அன்புப் பேர்பெற்ற குடும்பத்தில் பிறந்தவரான ஸ்ரீமாந் சித. முரு. வீரப்ப செட்டியாரவர்கள் திங்களன்று மாலை தேவகோட்டையில் காலஞ்சென்றதைக் கேட்டு வருந்துகிறோம். இவர்களுக்கு வயது நாற்பதுக்குள்ளிருக்கலாம். பிறருக்குத் தீமை புரிவோர் மலிந்திருக்கு மிக்காலத்தில் ஸ்ரீமாந் செட்டியார் அவர்கள் யாருக்கும் ஒரு சிறு தீமையும் செய்யாதவாறு வாழ்ந்து வந்ததும் எவரிடத்திலும் வித்தியாசம் பாராட்டாது அன்போடும் தான் என்ற அகங்கார மின்றி நடந்து கொண்டதும் போற்றுதற்குரியனவாம். இள வயதில் உயிர் அகன்ற செட்டியாரவர்களின் குடும்பத்தாருக்கு நமது அநுதாபத்தை தெரிவிக்கிறோம்.

உள்ளூர்ச் செய்தி.

மஞ்சிவிரட்டு:—சென்ற புதனன்று மாலை செஞ்சையில் நடந்த மஞ்சிவிரட்டில் பலருக்குக் காயமேற்பட்டது. சில உயிர்ச் சேதங்களும் நேரிட்டன.

பொதுஜனக் கூட்டம்:— இன்று மாலை ௬-மணிக்கு மேல் கல்லுக்கட்டி மேல்கரையில் ஒத்துழையாமை யியக்கத்தின் பலனாக வக்கீல் வேலையை விட்டு தியாகியாக இங்கு விஜயம் செய்திருக்கும் ராணிப்பேட்டை ஸ்ரீமான் சக்கரவர்த்தி ஸ்ரீவத்ஸ யையங்கார் அவர்களால் "அற்புத மனிதரும் ஆன்மசக்தியும் அவர் ஒத்துழையாமை யியக்கத்தின் விரிபொருளும்" என்னும் பொருள்கள் பற்றி உபந்யாஸம் நடைபெறுகிறது.

மகாத்மாவின் கொள்கை.

ஆண்டிரூஸ் துரைமகனார் மாஞ்சேஸ்டர் கார்டியனில் எழுதுகிறார்.

மகாத்மா காந்தி சமீபத்தில் ஒரு ஆங்கில நண்பருக்கு எழுதிய கடிதத்தில் தமது தற்கால வேலைகளைப்பற்றிக் கூறியிருக்கிறார். அவருடைய வார்த்தைகள் மிகச் சுருக்கமாக விருப்பதால், இப்போது ஒத்துழையா இயக்கத்தைப் பற்றி அவர் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை விஸ்தரிக்க நான் அவர் அநுமதியைப் பெற்றுக்கொண்டேன்.

சுருங்கச்சொல்லின், மகாத்மாவின் வேலைகள் கீழ்க்காட்டிய துறைகளைப் பற்றிய தாகும்:—

(க) இந்துக்களுக்குள் தீண்டாமை என்னும் சாபத்தை யொழித்தல்.

(உ) கையினால் நூற்றலும் கைநெசவும் பரவச்செய்தல்; கையினால் நூற்றுக் கையினால் நெய்த துணிகளையே உபயோகிக்கும்படி சொல்லுதல்; அந்நியநாட்டுத்துணிகளையும் இந்திய ஆலைத்துணிகளையும் கூட ஒதுக்கச் சொல்லுதல்.

(௩) ஆடம்பரமற்ற சாமான்ய வாழ்வை யநுசரிக்கச் சொல்லுதல்; அதனால் மயக்கமுள்ள குடிவகைகளையும் வஸ்துக்களையும் வெறுக்கச் செய்தல்.

(ச) ஒத்துழையாப் போராட்டத்தின் ஒரு அம்சமாக அரசாங்கக் கல்விச் சாலைகளிலிருந்து மாணவர்களை வெளியேற்றும் பொருட்டும், கைத்தொழிற் பழக்கத்தைமுன்னிட்டுத் தேசீய இயக்கத்துக்கு ஒற்றுமையாகத்தேசீயக்கல்வியைப் புகட்டும் பொருட்டும், தேசீயக் கல்விச் சாலைகளை அரசாங்க உதவியின்றி ஏற்படுத்துதல்.

(௫) இந்துக்கள் முகம்மதியர், கிறிஸ்தவர், பார்ஸிகள்; முதலிய பலவேறு மதத்தினருள் ஒற்றுமையை யுண்டாக்குதல்.

இரண்டு ஸ்தாபனங்களால் மேற்கூறிய வேலைகளை மகாத்மா செய்துவருகிறார். முதலாவது ஆமதாபாத்துக் கருகில் ககூகசு-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பெற்ற ஒரு கலாசாலையாகும் இதில் மேற்கண்ட கொள்கைகளைப் பற்றி வேலை செய்ய விரும்புவோர் யாரும் சேரலாம். அந்தக் கலாசாலையின் செலவு சில தனவந்த நண்பரின் உதவியால் நடைபெறுகிறது. அந்தக் கலாசாலையில் தற்போது நூறுபேர் பயிற்சி பெறுகின்றனர். ஆண்களும் பெண்களும் தீண்டத்தகாதோ ரென்று சொல்லப்படும் குடும்பங்களிற் பலவும் அங்கே யிருக்கின்றனர். நூல்நூற்று நெசவு நெய்யும் கல்வியும் போதிக்கப்படுகிறது. சாதாரண எழுத்துப் படிப்பும் வழங்கப்படுகிறது. சாமான்ய விவசாய வேலையும் கற்பிக்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவையான பருத்தியை அங்கேயே விளைவித்துக் கொள்ளுகின்றனர்.

இரண்டாவது ஸ்தாபனம் தேசீய மகா சபையாகும். இது ஒரு பெரிய இராஜீய ஸ்தாபனம். இதன் கொள்கை மிகச் சுளுவான தென்றாலும், முற்றமுடிந்த தொன்றாம். இந்தத் தேசீய சபையானது மேலே கூறியுள்ள வேலைகளை முழுமையும் அங்கீகரித்துள்ளது. இந்தச் சபைக்கு இந்தியாவில் எந்தப் பகுதியிலும் கிளைச் சபைகள் உண்டு. வருஷந்தோறும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் ஆயிரக்கணக்கான அங்கத்தினர்களு முண்டு. நாலணா சந்தா செலுத்திக் காங்கிரஸின் விதிகளை ஒப்புக்கொள்ளும் வயது வந்த எந்த ஆணும் பெண்ணும் இதில் அங்கத்தினராகிப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்கு வாக்குரிமையுண்டு. மேற்கூறிய வேலைகளைத் தவிர இன்னும் விஸ்தாரமான வேலைகள் காங்கிரஸுக்கு உண்டு. ஆனால் பொதுஸ்தாபனமானதால் சாஸ்வதமான வேலைத்திட்டமொன்றும் கிடையாது. வருடந்தோறும் வேலைத் திட்டம் மாறக் கூடும். அதன் நோக்கம், அமைதியான, நியாயமான முறைகளில் சுயராஜ்யம் பெறுவதேயாம். சென்ற நான்கு வருடங்களாகக்காங்கிரஸ் சபை அரசாங்கத்தாருடன் அமைதியான ஒத்துழையாமுறையினால் தனது நோக்கத்தை யடையப் பாடுபட்டு வருகிறது.

'எனது அந்தரங்க நோக்கமாவது, நவீன (மேனாட்டு) நாகரீகம் இந்தியாவுக்குள் புகுத்தப்படுவதால் அழிவுறவிருக்கும் இந்திய (பூர்வீக) நாகரீகத்தைப் பாதுகாக்க முயற்சிப்பதிலேயே எனது சக்திமுழுமையும்பிரயோகிப்பே' னென்று மகாத்மா கூறுகிறார். பூர்வீக நாகரிகத்தின் சாரம் கூடுமானவரையில் பலாத்காரமற்ற பயிற் யையே அடிப்படையாகக் கொண்டதாம். அதன் கொள்கையாவது, எவ்வித உயிர்ப் பிராணியு முள்ளிட்ட, எல்லாருடைய நன்மையையும் கோரியதாகும். மேனாட்டு நாகரீகமோ, வெளிப்படையாகவே பலாத்காரத்தை அஸ்திவாரமாகக் கொண்டது. ஆனதால், மேனாட்டு நாகரீகத்தினிடத்து எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதற்கு இடமில்லை. அது மேனேக்கி விர்த்தியடையவே, மானிட உயிர்களையும் ஒருமிக்க அழிப்பதில் பின்வாங்கவில்லை. தனது பழைய வழக்கங்களை ஆராய்ச்சியின்றி ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக உண்மையை ஆராய்ந்தறியும் மேனாட்டு முறைகளை இந்தியா பின்பற்ற வேண்டுமென்பது எனது விருப்பமாகும். ஆனால் இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன் யாதொன்றையும் பின்பற்றுவது அபாயமாகும். இந்த நிலவுலகத்தில் தனது நாகரீகமே மிக முக்கியமான ஸ்தானத்திற் குரியதென்றும் அதனால் அதனை எப்பாடு பட்டும் பாதுகாக்கவேண்டுமென்றும் இந்தியா அறிந்துகொள்ள வேண்டும். பிரிட்டிஷார் மேனாட்டு நாகரீகத்தை இந்தியாவில் புகுத்திவிட்டதினால் லட்சக்கணக்கான ஜனங்கள் பசியால் வருந்தும்படி நேரிட்டிருக்கிறது.

மேனாட்டு முறைகளையல்லாமல் இந்திய முறைகளையே;அதாவது உள்ளுக்குள்ளேயே சீர்திருத்தமும் தன்னைச்சுத்தி செய்தலு மாகிய முறைகளையே அநுசரிப்பதினால் இனிவரப்போகும் நாசத்தை மேற்கண்ட வேலைத்திட்டம் தடுப்பதாகும். தீண்டாமையையொழித்தலாவது, இந்துக்கள் தங்கள் மர்தஸ்தகளில் ஐந்திலொரு பகுதியாரைக் கீழ்மைப்படுத்திவந்த பாவத்திற்காகத் தபசு செய்வதாகும். லாகிரிபானங்கள் வஸ்துக்களாகிய சாபத்தை யகற்றுதலாவது, ஜனங்களைப் பரிசுத்தப் படுத்துவதுமன்றி அரசாங்கத்தின் தீய முறையினால் உ௫ கோடி ரூபா வரையில் தீய வழியில் பெறும் அரசிறையை ஒழிப்பதாகும். கையினால் நூற்றலும் கை நெசவும் இந்தியாவின் லட்சக்கணக்கான குடிசைகளில் பழைய கைத்தொழிலைத் திரும்ப ஸ்தாபித்து அத்தொழிலுக்குப் புத்துயி ரளிப்பது மன்றிக் கேவலமான வறுமையை யகற்றிப் பஞ்சம் வராமல் தானாகவே காத்துக் கொள்ளும் சாதனமாகும். அதுவு மன்றி இந்தியாவைச் சூறையாடுவதில் பிரிட்டனுக்குள்ள பலமான ஆவலையும் ஒழிப்பதாகும். எவ்வாறெனில், பிறநாட்டுத் துணிகளையும் இயந்திரங்களையும் வாங்காது இந்தியா தனக்குவேண்டிய ஆடைகளைத்தானே உற்பத்தி செய்யக்கூடுமானால், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமுள்ளசம்பந்தம்இயற்கையானதாயும் விரும்புகிறபடியும் இருக்கும் என்பது திண்ணம்.

சம்மத வயதை உயர்த்தும் மசோதா.

ஸ்திரீ புருட சேர்க்கையை அரசாங்கக் குற்றச் சட்டத்தில் இருவிதமாக வகுத்திருக்கின்றனர். கஉ வயதுக் குட்பட்ட பெண்களுடன் சேர்தல் ஒன்று; கஉ வயதுக்கு மேற்பட்ட பெண்களுடன் சேர்தல் மற்றொன்று. கஉ வயதுக்குட்பட்ட பெண்களுடன் கொண்ட கணவனாயினும் அந்நிய புருடனாயினும் சேர்ந்தாலும் சேர எத்தனித்தாலும் குற்றமாகக்கொண்டு தண்டனை ஏற்பட்டிருக்கிறது. கஉ வயதுக்கு மேற்பட்ட பெண்ணுடன் சொந்தப் புருடன் சேர்வதைக் குற்றமாகப் பாவிக்கவில்லை; அந்நியன் சேர்வதையே குற்றமாக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இது இந்நாட்டில் வழக்கத்தை யநுசரித்ததாகவே யிருக்கிறது.ஆனால் கஉ-வயதில் பெண்கள் பலர் பூப்படைந்த போதிலும் புருடருடன்கூடி மகப்பெறுவதற்கு அவ்வயதில்பெண்களின் சரீர ஏற்றதல்லவென்பதையும் ஒப்புத்கொள்ளவேண்டியிருக்கிறது. இப்போது கச-வயது வரைக்கும் பெண்களுடன் ஆடவர் சேர்வதைக் குற்றமாக்கமுயன்று வருகின்றனர். ககூஉஉ-ல் ஸ்ரீமாந் படேல்அவர்களால் இதற்காக ஒரு மசோதா இந்தியசட்டசபையில்கொண்டுவரப்பட்டு வைதிக இந்து முகம்மதிய பிரதிநிதிகளால் ஆட்சேபிக்கப்பட்டு நிறைவேறாது தொழிந்தது. இவ்வருடத்தில் டாக்டர் கவர் அவர்கள் அதே மாதிரி மசோதா ஒன்றை மீட்டும் கொண்டுவர அது ஆலோசனைக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டது. இம்மசோதா சட்டமானால் அநேக இந்து முகம்மதிய புருடர் தண்டனைக் குள்ளாவார்களென்னும் காரணத்தை முன்னிட்டுப் பலர் ஆட்சேபனை செய்கின்றனர். இந்த மசோதா இந்தியா சட்டசபையின் செப்டம்பர் மாதக் கூட்டத்தில் விசாரத்துக்கு வரும்.

தபால் தந்தி மித்திரன்.

மூன்றும் பதிப்பு அச்சில் தயாராகிக்கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் வெளிவரும்.

முதல் இரண்டாம் பதிப்பைப் பார்க்கிலும் அநேக விஷயங்கள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறதுமன்றி ருத்திரோத்காரி வருடம்வரை தவணைவட்டி கூடப்பு வட்டிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வர்த்தகர்களுக்கு இப்புத்தகம் அவசியம் வேண்டற்பாலது. சொற்பப்பிரதிகளே தயாராகிக் கொண்டிருக்கிறபடியால் வேண்டுவோர் முன்னதாகவே ஆர்டர் அனுப்பிவைக்கும்படி செய்யவேண்டியது.

இதன் விலை ரூ. 2—0—0
வீ. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வைசியநேசன,
தபால் பெட்டி நெ. 251,
ரங்கூன்.

எங்களிடம் நயம் மரியாப் புழுங்கலரிசி பச்சரிசி துவரம் பருப்பு உழுந்தம்பருப்பு கடலைப்பருப்புகளும் சாதகமான விலையில் கிடைக்கும்.

சொ. முருகப்பசெட்டியாரால் (பத்திராதிபர்) காரைக்குடி "குமரன்" அச்சுக்கூடத்தில் அச்சியற்றிப் பிரசுரிக்கப்பெற்ற.

END OF
ISSUE